திரு. எம். சின்னசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவ மழை தவறியதற்குக் காரணம் மரங்களை அதிகமாக வெட்டிவிடுவதுதான் என்று முன்பே இங்கே சொல்லப் பட்டது. இதனால் ஒரு மாவட்டத்திற்கு குறைந்தது ஒரு கோடி மரங்களை வைக்க வேண்டும் என்கிற ஒரு திட்டத்தை அரசு மேற்கொண்டு அதற்கு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு தமிழகத்திலே இவ்வளவு மரங்களை நடவேண்டும் என்கிற திட்டம் இடப்பட்டுதான் மரங்கள் நடப்படுகின்றன. 1981–82லே 570 லட்சம். அதாவது 5 கோடியே 70 இலட்சம் மரங்கள் நடப்பட வேண்டும் என்பது திட்டம். ஆனால், ஆதையும் தாண்டி 7 கோடியே 64 இலட்சம் செடிகள் நடப்பட்டன. 1982–83லேயிலிருந்து 883 இலட்சம் செடிகள் நடப்பட வேண்டும் என்பது திட்டம். டிசம்பர் முடிய 661 இலட்சம் செடிகள் நடப்பட்டுள்ளன.

மதுரையில் வானொலி நிலையம் அமைக்கும் திட்டம்

*வினா எண். 175—திரு.வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் ரேடியோ நிலையம் அமைக்க மாநில அரசு மைய அரசைக் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) மதுரையில் வானொலி நிலையம் அமைக்க வேண்டும் என்ற மாநில அரசின் கோரிக்கையை இந்திய அரசு ஏற்றுக் கொண்டு அதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, தொடர்புடைய வானொலி நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது வானொலித் துறை பொறியாளர்கள் வானொலி நிலையம் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

(முற்பகல் 9.20)

திரு.வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தப் பணி எப்போது முடியும். விரைவாக இதை அமைக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கேட்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1968 ஆம் ஆண்டிலே எழுப்பப்பட்ட கோரிக்கை. இப்போது 1982-ஆம் ஆண்டிலே தான் அவர்கள் திட்டத்தை ஏற்றுக்கொண்டு நம்மிடத்திலே இடத்தையும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகமிக விரைவிலே முடிந்து மதுரையிலே வானொலி நிலையம் விரைவாக வரவேண்டும் என்று மத்திய

1983 பிப்ரவரி 8]

அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். அவர்களும் அவர்களுடைய கட்டு மானப் பணிகளைத் தீவிரப்படுத்துவதாகத் தெரிவித்திருக் கிறார்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவரவர்களே, மதுரையில் துவக்கப்பட இருக்கும் புதிய வானொலி நிலையம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ரிலே செய்கின்ற நிலையங்கள் போல் செயல்படுமா அல்லது தனித்து செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, மதுரையிலே அமைகின்ற வானொலி நிலையம் தனியாக இயங்கு கின்ற வானொலி நிலையமாக இருக்கும்.

முதுமலைக் காட்டில் வனவிலங்குகளைக் விருத்தி செய்வதற்கான திட்டம்

*வினா எண். 176— திரு. சி.கனேசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம் முதுமலைக் காட்டில் வனவிலங்குகள் (சிறுத்தை, புலி) போன்ற இனத்தை விருத்தி செய்யத் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 351 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் 63.88 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள பகுதியை புலி ஒதுக்கப்பகுதியாக அறிவிப்பது குறித்தும் உய்விடத்தில் மையப்பகுதியை புலி ஒதுக்கப்பகுதியாகவும் இதைச் சுற்றியுள்ள மீதமுள்ள பகுதிகளை வனவிலங்குகள், கால்நடைகள் மேய்ச்சல் வன சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற காரியங் களுக்குப் பயன்படுத்தும் வகையிலும் திட்டம் மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. சி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனம் கேரள மாநிலம் மற்றும் கர்நாடக மாநிலம் ஆகியவற்றின் எல்லைக் கோடுகளுக்குள்ளே இருப்பதன் காரணத்தால் இந்த வனவிலங்குகள் எல்லா மாநிலங்களிலும் அட்டென்டன்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கும். எனவே இந்த நிலைமையைப் போக்குகின்ற வகையிலே அவற்றை நம்முடைய மாநிலத்திற்குள்ளேயே விருத்தி செய்வதற்காக ஆங்காங்கே இருக்கின்ற வனவிலங்குகளை எல்லாம் எடுத்து நம்முடைய தமிழக எல்லைக்குள்ளே இருக்கின்ற வனங்களிலே அதாவது வால்பாறை, வள்ளிமலை போன்ற இடங்களில் விட்டு அவற்றை மேலும் விருத்தி செய்யக் கூடிய திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனவிலங்குகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது என்பது இயலாது. அது இயற்கையாக ஒரு எல்லையிலே இருந்து இன்னொரு எல்லைக்கு குறிப்பிட்டக்